සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / *All Rights Reserved*]

**නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – *New/Old Syllabus***

**NEW/OLD**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Adv. Level) Examination, 2020**

| | | |
|---|---|---|
| සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I<br>**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I**<br>Communication and Media Studies I | **29 T I** | පැය දෙකයි<br>**இரண்டு மணித்தியாலம்**<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இவ்வினாத்தாள் **A, B, C** ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. **பகுதி A பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கான** பொதுவான வினாக்களையும், **பகுதி B பழைய பாடத்திட்டத்திற்கான** வினாக்களையும், **பகுதி C புதிய பாடத்திட்டத்திற்கான** வினாக்களையும் கொண்டது.
- ※ **பகுதி A** இல் **1** முதல் **25** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக. **பகுதி B, பகுதி C** ஆகியவற்றில் **ஒரு பகுதியை மாத்திரம்** தெரிவுசெய்து **26** முதல் **50** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி A

**1.** தொடர்பாடலானது,
(1) குறியீட்டுத் தன்மையானது. (2) தொழினுட்பம் சார்ந்தது.
(3) சூழலமைவு அடிப்படையானது. (4) இரு வழியானது.
(5) பல் திசைகளிலானது.

tamilguru.lk

**2.** எழுத்தாளர் ஒருவர் தனது தனிப்பட்ட அனுபவத்தை மீளுருவாக்கம் செய்வதனூடாகச் செய்திப்பத்திரிகை ஒன்றுக்குச் சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுத எண்ணினார். இது மிகப் பொருத்தமாக அமைவது
(1) எழுத்துத் தொடர்பாடலுக்கு ஆகும். (2) வெகுசனத் தொடர்பாடலுக்கு ஆகும்.
(3) அச்சு ஊடகத்திற்கு ஆகும். (4) முறைசாராத் தொடர்பாடலுக்கு ஆகும்.
(5) ஆளுள் தொடர்பாடலுக்கு ஆகும்.

**3.** ஷினொன் மற்றும் வீவரின் தொடர்பாடல் மாதிரியில் **உள்ளடக்கப்படாதது**
(1) தடை (2) செய்தி (3) மூலம்
(4) விளைவு (5) குறியீடு

**4.** அறிவுசார் சமூகத்தை விருத்தியடையச் செய்வதில் வரலாற்றுரீதியான வகிபங்கொன்று ஆற்றப்பட்டது,
(1) செய்திப் பத்திரிகையினால் ஆகும். (2) புத்தகத்தினால் ஆகும்.
(3) சஞ்சிகையினால் ஆகும். (4) துண்டுப்பிரசுரத்தினால் ஆகும்.
(5) அறிவிப்புக் காகிதத்தினால் ஆகும்.

**5.** மானுட சமூகத்திற்கு தொடர்பாடலினால் வழங்கப்பெற்ற அளப்பரிய சமூக சேவையானது,
(1) சிந்தனைகளைப் பொதுமைப்படுத்தியது ஆகும். (2) பொழுதுபோக்கினை வழங்கியது ஆகும்.
(3) ஒழுக்காற்றை வழங்கியது ஆகும். (4) பெறுநரிடம் தாக்கத்தை உருவாக்கியது ஆகும்.
(5) இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்பியது ஆகும்.

**6.** செய்திப்பத்திரிகையொன்றில் மொழியின் பயன்பாடானது,
(1) பாரம்பரியமாயிருத்தல் அவசியம். (2) சிக்கல்தன்மையானதாயிருத்தல் அவசியம்.
(3) எளிமையாயிருத்தல் அவசியம். (4) கவித்துவமாயிருத்தல் அவசியம்.
(5) நவீனமாயிருத்தல் அவசியம்.

**7.** நாட்டாரியல் முக்கியமானதொரு தொடர்பாடல் வடிவமாயிருப்பது ஏனெனில்,
(1) அது ஆட்களிடைத் தொடர்பாடல் வழிமுறையாகும்.
(2) அது பேச்சுத் தொடர்பாடல் வழிமுறையாகும்.
(3) அது படைப்பாக்க மூலமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதாகும்.
(4) கிராமியத் தகவல்களை முன்வைப்பதாகும்.
(5) உள்ளூர்த் தொடர்பாடல் மாதிரியொன்றாக முன்வைக்கப்படுவதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க.

**8.** தொலைக்காட்சியில் காட்டப்பட்ட நடனத்துடனான பாடல் ஒன்றைத் தொடர்ந்து, கமல் தனது அறையில் தனியாகக் கைகளைத் தட்டி நடனமாடினான். மேற்படியாக நிகழ்த்தப்பட்ட செயன்முறை
(1) குறிமுறையவிழ்ப்பாகும். (2) புலனுணர்தலாகும்.
(3) தொடர்பாடலாகும். (4) பின்னூட்டமாகும்.
(5) நடனமாடுதலாகும்.

**9.** ஆசிரியர் வகுப்புக்கு வந்த பின்னர் பாடநூலின் பக்கங்களைப் புரட்டிய கணத்தில், வாகனமொன்றின் சைரன் ஒலியைச் செவிமடுத்ததனால் மாணவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இதனால் காட்டப்படுவது
(1) முறைசாராத் தொடர்பாடல் (2) தொடர்பாடல் இடையூறு
(3) ஆளுள் தொடர்பாடல் (4) வாய்மொழி சாராத தொடர்பாடல்
(5) ஒலித் தொடர்பாடல்

**10.** தொடர்பாடல் செயன்முறையில் அடிப்படைக் கூறுகளை **உள்ளடக்கியிராத** தெரிவு எது?
(1) ஊடகம், குறிமுறையவிழ்ப்பவர், சூழலமைவு, விளைவு
(2) தொடர்பாடுநர், குறிமுறையவிழ்ப்பவர், விளைவு, இடையூறு
(3) பெறுநர், பின்னூட்டம், நடித்தல், ஊடகவழி (channel)
(4) குறிமுறையாக்குபவர், அனுபவக்களம், இடையூறு, பெறுநர்
(5) குறிமுறையாக்குபவர், பின்னூட்டம், மூலம், ஊடகவழி (channel)

**11.** கொரோனா தொற்றுநோய் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சீனாவில் தயாரிக்கப்பட்ட விவரணப்படமொன்று, இலங்கையிலும் அந்நோய் பரவிய பகுதிகளில் திரையிடப்பட்டது. இது மிகவும் முக்கியமானதாக இருப்பது ஏனெனில்,
(1) கொரோனா தொற்றுநோய் பற்றிய தகவல் முதலில் அறிக்கையிடப்பட்டது சீனாவில் ஆகும்.
(2) காட்சி ஊடகம் அதிகம் வலுவானது.
(3) இது கூட்டுத் தொடர்பாடல் செயற்பாடாகும்.
(4) இது ஒத்த அனுபவப் பரப்பு பற்றிய தகவல்களைத் தருவதாகும்.
(5) இது பண்பாட்டு இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புவதனாலாகும்.

**12.** கிராபிக்ஸ் படமொன்றைக் கணினியில் உருவாக்குவதற்கு தனது சகோதரிக்கு அறிவுறுத்தல் வழங்கிய கமல், அப்படத்திற்கு வர்ணங்கள் பயன்படுத்தும் முறையினையும் விளக்கினான். இங்கு நிகழ்த்தப்பெற்ற தொடர்பாடல் செயற்பாடானது,
(1) கல்வி வழங்குதலாகும். (2) தகவல் வழங்குதலாகும். (3) உருவாக்கம் ஆகும்.
(4) சமூகமயமாக்கல் ஆகும். (5) தூண்டுதல் ஆகும்.

**13.** தொடர்பாடல் களத்துடன் சம்பந்தப்பட்ட மூன்று அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- பொதுவான இலக்குகளைக் கொண்டது.
- ஒரு வழியானதாக அல்லது இரு வழியானதாக இருக்கலாம்.
- பதில் - பின்னூட்டத்தைக் கொண்டது.

மேற்படி அம்சங்கள் மிகவும் நெருக்கமாகத் தொடர்புபடுவது,
(1) ஆட்களிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) குழுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) வாய்மொழித் தொடர்பாடலுடன் ஆகும்.
(4) முறைசார் தொடர்பாடலுடன் ஆகும்.
(5) அறிவுறுத்தல் தொடர்பாடலுடன் ஆகும்.

More Past Papers at
tamilguru.lk

**14.** கிராமமொன்றிலுள்ள குளத்தை அண்மித்ததாக நடைபெறும் சடங்குகள் பற்றி கிராமவாசிகளிடமிருந்து தகவல்களைக் கேட்டுப், பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் கொண்டு வானொலி அறிவிப்பாளர் நிகழ்ச்சியை வெற்றிகரமாக அளிக்கை செய்தார். இந்தச் சந்தர்ப்பம் எந்த தொடர்பாடல் விஞ்ஞானியின் வரைவிலக்கணத்துடன் அதிகம் பொருத்தமுடையதாயிருக்கிறது?
(1) ஹரோல்ட் லாஸ்வெல் (2) வோல்ற்றர் லிப்மென் (3) சார்ள்ஸ் கூலி
(4) எட்வேர்ட் சப்பியர் (5) ஷெனொன் மற்றும் வீவர்

**15.** "வெகுசன ஊடகங்களின் செய்திகள் சிக்கற்தன்மையானவை." அவற்றைப் புரிந்துகொள்வதற்கும் பொருட்கோடல் செய்துகொள்வதற்கும் பெறுநர் கொண்டிருக்கும் தகைமை
(1) ஊடகத் திறனாய்வு (2) ஆழ்பரிவு (3) ஊடக விளங்கறிவு
(4) புலக்காட்சி (5) உள்ளுணர்வுடனான அறிவு

**16.** பொதுமக்கள் உழைப்பினை செயற்றிறனுடன் பயன்படுத்துவதாக அடையாளப்படுத்தக்கூடிய பண்பாட்டு வடிவமொன்றாக அமைவது
(1) பிரசித்த பண்பாடு (2) நாட்டார் பண்பாடு (3) செவ்வியற் பண்பாடு
(4) ஊடகப் பண்பாடு (5) பூகோளப் பண்பாடு

[பக். 3 ஐப் பார்க்க.

**17.** மிகவும் பின் தங்கிய கிராமமொன்றில் டெங்கு பரவுகையில், அந்நோயிலிருந்து அம்மக்களை பாதுகாப்பதற்காக அவர்களுக்கு விழிப்புணர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு பயன்படுத்த முடியுமான ஆகப் பொருத்தமான தொடர்பாடல் வழிமுறை எது?
(1) சமூக ஊடகம் (2) சுவரொட்டிகள் (3) விவரணப் படங்கள்
(4) வெகுசனத் தொடர்பாடல் (5) ஆட்களிடைத் தொடர்பாடல்

**18.** ஊடக விளங்கறிவுடன் தொடர்புபட்டதாகக் கருத **முடியாத** திறனொன்று பற்றிய கூற்று
(1) ஊடகச் செய்திகளை நுகர்வதற்கான ஏற்புநிலை
(2) ஊடகச் செய்திகளை உணரும் தகைமை
(3) ஊடகச் செய்திகளின் தாக்கங்களை அறிதல்
(4) ஊடகச் செய்திகளின் செயன்முறையை அறிதல்
(5) ஊடகச் செய்திகளை உருவாக்கும் தகைமை

More Past Papers at
tamilguru.lk

**19.** கீழே தரப்படுவனவற்றுள் பிரசித்த பண்பாடு பற்றிய **தவறான** சிந்தனையாக இருப்பது எது?
(1) தொடர்பாடல் தொழினுட்பத்துடன் தொடர்பினைக் கொண்டது.
(2) வர்த்தகப் பொருட்களுடன் இணைந்திருக்கிறது.
(3) சிறுவர்களை அதிகம் ஈர்க்கின்றது.
(4) உயர்நிலை அழகியல் அம்சங்களைக் கொண்டிருக்கிறது.
(5) சமூக நடத்தைகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

**20.** 'பொதுமக்கள் தொடர்பு' பற்றிய சரியான சிந்தனையைக் குறித்து நிற்கும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது பிரபல்யமற்றதிலிருந்து வேறுபட்டதல்ல.
(2) அது விளம்பரத்திலிருந்து வேறுபட்டதல்ல.
(3) அது சந்தைப்படுத்தலிருந்து வேறுபட்டதல்ல.
(4) அது சந்தை விரிவாக்கத்திலிருந்து வேறுபட்டதல்ல.
(5) அது குறுகியகால ஆதாயங்களை எதிர்பார்ப்பதிலிருந்து வேறுபட்டதல்ல.

**21.** கீழே தரப்படுவன நாட்டார் கதைகள் பற்றிய சில கூற்றுகளாகும்.
*A* - அவை சமூக உணர்வைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.
*B* - அவற்றின் படைப்பு மூலம் நிச்சயமாக வெளிப்படையானது.
*C* - அவை பண்பாட்டை ஊடுகடத்துகின்றன.
*D* - அவை மூடநம்பிக்கைகளில் மாத்திரம் தங்கியிருப்பவை.
மேலுள்ளவற்றுள் உண்மையான கூற்றுகள்
(1) *A, B* (2) *A, C* (3) *B, C* (4) *B, D* (5) *C, D*

**22.** மக்களுக்கான தொழிலின்மை மற்றும் சமூக சமநிலையற்ற தன்மையை அபிவிருத்திக்கான பிரச்சினைகளாகக் காட்டிய அறிஞர்
(1) வில்பர் ஷ்ராம் (2) மகாத்மா காந்தி
(3) எவரெட் எம். ரோஜர்ஸ் (4) டட்லி சியர்ஸ்
(5) விமல் திஸாநாயக்க

**23.** படைப்பாக்கத் தொடர்பாடல் மீதான வகுப்பறைக் கலந்துரையாடலொன்றில் பின்வரும் சிந்தனைகள் முகிழ்த்தெழுந்தன.
ரேணுகா - படைப்பாக்க வாசிப்பின் மூலம் மேலோட்டமான அர்த்தங்களை விடவும் அதிகமாக சில விடயங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
மது - படைப்பாக்க வாசிப்பிற்கு ஊடக விளங்கறிவு அவசியமானது.
சாமலி - படைப்பாக்கச் சிந்தனைக்கு கற்பனையாக்கம் முக்கியமானதொரு அம்சமாகும்.
ரஞ்சன் - படைப்பாக்க வாசிப்பு எழுத்துக் கலைக்கே உரித்தான விசேடமானதொரு அம்சமாகும்.
இவற்றுள் சரியான கூற்றுகளை வெளியிட்டவர்கள்
(1) ரேணுகா, மது, சாமலி
(2) ரேணுகா, மது, ரஞ்சன்
(3) ரேணுகா, சாமலி, ரஞ்சன்
(4) மது, சாமலி, ரஞ்சன்
(5) ரேணுகா, மது, சாமலி, ரஞ்சன் ஆகிய அனைவரும்

**24.** ஊடகங்கள் சமூக அறிவை வழங்குவதோடு, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எவ்வாறு மக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கும் வகிபங்கு தொடர்புபடுவது
(1) சுய எண்ணக்கரு ஆகும். (2) அவதானிப்பு ஆகும்.
(3) சமூகமயமாக்கல் ஆகும். (4) புலக்காட்சி ஆகும்.
(5) எழுத்தறிவு ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க.

**25.** ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழி தொடர்பான நான்கு கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன
*A* - திரையை அடிப்படையாக வைத்தே எழுத்து உருவாக்கப்படுகிறது.
*B* - இலக்குப் பெறுநர் குழுவைக் கொண்டே மொழி பயன்படுத்தப்படுகிறது.
*C* - காட்சி மற்றும் ஒலி ஆகியன சம வலுவுள்ளவை.
*D* - படைப்பாக்க எழுத்தின் வழியாக பெறுநருடைய கற்பனையாக்கம் மேம்படுத்தப்படுகின்றது.
மேற்படி கூற்றுகள் குறித்து நிற்கும் ஊடகங்களின் தொடரொழுங்கு யாது?
(1) திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை
(2) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, திரைப்படம், வானொலி
(3) திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகை
(4) தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், செய்திப்பத்திரிகை
(5) திரைப்படம், செய்திப்பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி

More Past Papers at
tamilguru.lk

## பகுதி B

**26.** புதிய காலனித்துவத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாக அறியப்படும் பண்பாட்டுப் போக்கானது,
(1) பண்பாட்டு அதிர்வு ஆகும். (2) பண்பாட்டு ஆக்கிரமிப்பு ஆகும்.
(3) பண்பாட்டுப் பரிமாற்றம் ஆகும். (4) பண்பாட்டுப் பரவல் ஆகும்.
(5) பண்பாட்டு ஆர்முடுகல் ஆகும்.

**27.** பெறுநருக்குப் புதிய அறிவையும் புரிதலையும் வழங்குவதற்காக அளிக்கப்படும் செய்திகள் அழைக்கப்படுவது,
(1) வழிகாட்டற் செய்திகள் எனவாகும். (2) நடவடிக்கைச் செய்திகள் எனவாகும்.
(3) வலுப்படுத்தும் செய்திகள் எனவாகும் (4) புலக்காட்சிச் செய்திகள் எனவாகும்
(5) ஊக்கப்படுத்தும் செய்திகள் எனவாகும்

**28.** இராமாயண நாடகத்தில் அனுமன் தனது செந்நிறக் கண்களை அசைத்தவாறு செயற்றிறனுடன் நடனமாடினான். நடிப்பின் உத்திகள் அடிப்படையில், இங்கு நிகழ்த்தப் பெற்றது
(1) உடலசைவுகள் (2) வாய்மொழி சாராத தொடர்பாடல்
(3) இயல்பான நடை (4) முக அசைவுகள்
(5) சந்தர்ப்பத்திற்கேற்ற நடிப்பு

**29.** ஊடகத் திறனாய்வில் சமூக உறவுகள் மற்றும் சமூக சக்திகள் முதலியன கூர்ந்து ஆராயப்படுவது,
(1) நல்லொழுக்கம் சார்ந்த பிரவேசம் ஊடாக ஆகும். (2) அழகியல் சார்ந்த பிரவேசம் ஊடாக ஆகும்.
(3) மொழியியல் சார்ந்த பிரவேசம் ஊடாக ஆகும். (4) வரலாறு சார்ந்த பிரவேசம் ஊடாக ஆகும்.
(5) அரசியல் சார்ந்த பிரவேசம் ஊடாக ஆகும்.

**30.** நாயர் மற்றும் வைட்டின் அபிவிருத்தித் தொடர்பாடலுக்கான பரிமாற்ற மாதிரிக்கு உரிய பண்பாக அமைவது
(1) மதம் சார் அடிப்படையைக் கொண்டிருத்தல்
(2) பங்கேற்பு மூலமாகத் தீர்மானம் மேற்கொள்ளல்
(3) நாட்டார் பண்பாட்டினை அடிப்படையாகப் பயன்படுத்துதல்
(4) கருத்துருவாக்கத் தலைவர்களைப் பயன்படுத்துதல்
(5) மக்கள் தமக்காகத் தாமே செயலாற்றுதல்

**31.** பொதுமக்களின் வெற்றியை எதிர்ச்சக்திகளிடமிருந்து பாதுகாப்பதற்காக ஊடக சுதந்திரத்தையும் பொறுப்பையும் அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தும் தொடர்பாடல் எண்ணக்கரு எது?
(1) அதிகார வாதம் (2) சோவியத் சமவுடமை
(3) சமூகப் பொறுப்புக்கள் (4) தாராண்மைவாதம்
(5) ஜனநாயகம்

**32.** பின்வரும் சிந்தனைகள் மாணவர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் விளைவாகப் பெறப்பட்டன.
ருவான் - மாறுபட்ட சிந்தனைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.
கயனி - சுயாதீனச் சிந்தனையாளர்கள் அவசியம் வேண்டும்.
ஆகாஷ் - தனிப்பட்டவரின் கருத்துக்கு குழுவினரின் உடன்பாட்டை பெறவேண்டும்.
கமலினி - வெவ்வேறான சிந்தனைகள் உருவாவதை அனுமதிப்பதாக கலந்துரையாடல் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
மேற்படி கூற்றுகளில் உடன்பாடற்றநிலையை ஒத்தவற்றை முன்வைத்தவர்கள்,
(1) ருவான், கயனி (2) கயனி, ஆகாஷ்
(3) ஆகாஷ், கமலினி (4) ருவான், ஆகாஷ்
(5) கயனி, கமலினி

[பக். 5 ஐப் பார்க்க.

**33.** பொதுமக்கள் தொடர்பிற்குப் புகைப்படங்களைப் பயன்படுத்துவதுடன் **ஒத்திராத** கூற்று எது?
(1) செயற்பாட்டுப் புகைப்படங்கள் மிகப் பொருத்தமானவை
(2) வேறுபட்ட மற்றும் விசேட நிகழ்வுகளில் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தல்
(3) நீண்ட காலத்திற்குப் புகைப்படத்தைக் காட்சிப்படுத்தல்
(4) சந்தர்ப்பத்திற்கேற்ப நிலைத்த புகைப்படத்தைப் பயன்படுத்துதல்
(5) வேறுபட்ட அளவுகளில் புகைப்படங்களைப் பயன்படுத்துதல்

**34.** மொழி தொடர்பில் கீழே தரப்பட்டவற்றிலிருந்து **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க
(1) மொழி விவகாரங்களினால் நாடுகளில் முரண்பாடுகள் உருவாகியுள்ளன.
(2) மக்களின் உழைப்பை மொழி கட்டுப்படுத்துகின்றது.
(3) அதிகாரத்தை தக்கவைத்திருப்பதற்கு மொழி உதவுகின்றது.
(4) கிளைமொழிகளால் பிரதான மொழி மாற்றமடைகிறது.
(5) மொழிக்கும் பண்பாட்டிற்குமிடையிலான உறவு தொலைவிலுள்ளது.

**35.** ஒரு நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் அரசியல் மற்றும் பண்பாட்டுப் பிரச்சினையாக கருதப்படுவது
(1) தேசிய சிந்தனை மற்றும் கொள்கை இல்லாமலிருத்தலால் ஆகும்.
(2) ஊடகங்களின் வணிகமயமற்ற தன்மையினால் ஆகும்.
(3) மதத்தை மையப்படுத்தியிராமையினால் ஆகும்.
(4) பாரம்பரியத்திலிருந்து விலகியிருத்தலாகும்.
(5) மாற்றத்தைப் பற்றிய சந்தேகங்கள் இல்லாமலிருத்தலினால் ஆகும்.

**36.** பின்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பொதுமக்களின் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் தெய்வங்கள், பிசாசுகள் மற்றும் பேய்களுடன் தொடர்பற்றவை.
(2) நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும் சமூக யதார்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை.
(3) நாட்டார் சமயமும் சடங்குகளும் நாட்டார் நம்பிக்கைகளிலிருந்து விலகியிருப்பனவல்ல.
(4) நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும் கீழைத்தேய நாடுகளில் அரிதானவை.
(5) சடங்குகளும் நம்பிக்கைகளும் மக்களின் நடத்தைகளைப் பாதிப்பதில்லை.

**37.** தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் சில பதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

*A* - ஆழ்பரிவு    *B* - அவதானிப்பு
*C* - பகுப்பாய்வு    *D* - அடையாளப்படுத்தல்
*E* - தொகுப்பாக்கம்    *F* - பரீட்சார்த்தம்

மேலுள்ளவற்றுள், அறிவு விசாரணைக்கு உதவும் உத்திகள்
(1) *A, B, C, D*    (2) *A, B, D, E*
(3) *B, C, D, E*    (4) *B, C, E, F*
(5) *C, D, E, F*

More Past Papers at
tamilguru.lk


**38.** முரண்பாட்டுக்கான தீர்வு பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்படடுள்ளன.

*A* - தங்கை, உனது சிந்தனை சரியானது. என்னுடைய சிந்தனையை நான் மாற்றிக் கொள்கிறேன்.
*B* - அது நாமிருவரும் மகிழ்ச்சியடைய முடியாத விடயம் பற்றியதாகும்.
*C* - ஆம், நாமிருவரும் அத்தீர்வுக்குச் சம்மதிக்க முடியும்.

மேற்படி சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தக்கூடியதாய் அமைவது
(1) *A* வெற்றி - தோல்வி   *B* தோல்வி - தோல்வி   *C* வெற்றி - வெற்றி
(2) *A* வெற்றி - தோல்வி   *B* தோல்வி - வெற்றி   *C* வெற்றி - வெற்றி
(3) *A* வெற்றி - வெற்றி   *B* தோல்வி - தோல்வி   *C* வெற்றி - தோல்வி
(4) *A* வெற்றி - வெற்றி   *B* வெற்றி - தோல்வி   *C* தோல்வி - தோல்வி
(5) *A* தோல்வி - தோல்வி   *B* வெற்றி - தோல்வி   *C* வெற்றி - வெற்றி

[பக். 6 ஐப் பார்க்க.

- கீழே தரப்பட்ட வரைபடத்தை **39** முதல் **42** வரையான வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்துக.




**39.** தொடர்பாடல் மாதிரியொன்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது. A, B மற்றும் C ஆகியவற்றைக் குறித்து நிற்கும் விடயங்கள் முறையே
(1) குறிமுறையாக்குபவர், குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம்
(2) தொடர்பாடுநர், செய்தி, ஊடகவழி
(3) குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம், தொடர்பாடுநர்
(4) குறிமுறையாக்குபவர், பெறுநர், செய்தி
(5) குறிமுறையாக்குபவர், செய்தி, குறிமுறையவிழ்ப்பவர்

**40.** மேற்படி வரைபடத்தின்படி, A, B மற்றும் C ஆகியவற்றுக்கு இடையிலான செயன்முறையின் பிரகாரம்
*J* - நேர்வழித் தொடர்பாடல் இடம்பெறுவது காணக்கிடைக்கின்றது.
*K* - பின்னூட்டம் பெறப்பட்டது தெளிவாகின்றது.
*L* - ஏதாவது இடையூறு அங்கிருப்பது தொடர்பில் உணரப்படக் கூடியதாகின்றது.
*M* - எவ்வாறு செய்தி புரிந்து கொள்ளப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.
இவற்றில் உண்மையான கூற்றுகள்
(1) *J, K* ஆகியன மாத்திரம்
(2) *K, L* ஆகியன மாத்திரம்
(3) *L, M* ஆகியன மாத்திரம்
(4) *J, K, L* ஆகியன மாத்திரம்
(5) *K, L, M* ஆகியன மாத்திரம்

**41.** மேலுள்ள வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மிக நெருக்கமாகத் தொடர்பிலுள்ள தொடர்பாடல் மாதிரி எது?
(1) அரிஸ்டோட்டில் மற்றும் ஹரோல்ட் லாஸ்வெல்
(2) சார்ள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
(3) டேவிட் பெர்லோ மற்றும் வில்பர் ஷ்ராம்
(4) குளோட் ஷெனொன் மற்றும் வோரன் வீவர்
(5) வோரன் வீவர் மற்றும் சார்ள்ஸ் ஒஸ்கூட்

**42.** பெர்லோவின் மாதிரியுடன் மேலே தரப்பட்ட வரைபடத்தை ஒப்பிடுகையில் பின்வரும் விடயங்கள் மிக நெருக்கமாக காணப்படும் விடயம் / விடயங்கள்
(1) A
(2) A, B
(3) B
(4) B, C
(5) D

**43.** பின்வரும் சிந்தனைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரவரிசைப்படுத்தல்கள் தொடர்பில் கலந்துரையாடலொன்றில் எழுந்தவையாகும்.
*A* - நிகழ்ச்சியொன்றுக்கான தயாரிப்புச் செலவை அறிதல்
*B* - விருதுகள் அளிக்கப்படுதல்
*C* - நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்கான பொருத்தமான நேரத்தைத் தீர்மானித்தல்
*D* - தொலைக்காட்சிப் பார்வையாளர்களின் தன்மையை அறிதல்
மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகளுள் மிகவும் சரியானவை
(1) *A, B*
(2) *A, B, C*
(3) *B, C*
(4) *B, C, D*
(5) *C, D*

**44.** பூகோளமயமாதல் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது தேசிய அரசுகளைப் பலவீனப்படுத்துகின்றது.
(2) அது ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நிகழ்ச்சிநிரலைக் கொண்டிருக்கின்றது.
(3) அது கருத்து அடிப்படையிலான அணுகுமுறையை எடுத்துக் கொண்டுள்ளது.
(4) அது ஊடகச் செயன்முறையின் பல்வேறுபட்ட கூறுகளை விருத்தி செய்கிறது.
(5) அது தன்மையப்படுத்திய (self - centered) ஊடகங்களை உருவாக்குகின்றது.

[பக். 7 ஐப் பார்க்க.

**45.** கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி இந்த வினாவுக்கு விடையளிக்குக.

| | X | Y |
|---|---|---|
| *A* | ஊடக விளங்கறிவு | ஊடகப் பணியாளர்கள் |
| *B* | ஊடகக் கல்வி | படைப்பாக்கச் சிந்தனை |
| *C* | விமர்சனரீதியான ஆய்வு | பெறுநரின் புலக்காட்சி |
| *D* | பிரசித்த பண்பாடு | பொருத்தமான நுகர்வு வடிவம் |

மேற்படி அட்டவணையில் X இன் அதிகரிப்பு Y யின் அதிகரிப்பில் பாதிப்பை ஏற்படுத்துவது,

(1) *A, B* யிலாகும்.
(2) *A, C* யிலாகும்.
(3) *B, C* யிலாகும்.
(4) *B, D* யிலாகும்.
(5) *C, D* யிலாகும்.

**46.** பின்வருவன முரண்பாடு மற்றும் சகவாழ்வு பற்றிய இரண்டு கூற்றுகளாகும்

*A* - முரண்பாட்டு முகாமைத்துவம் என்பது தீர்வை தருவது அல்ல.
*B* - இலங்கையில் உள்ளக அமைதியும் சகவாழ்வும் உள்ளூர்ப் பண்பாட்டினால் போற்றப்படுகின்றன.

மேற்படி கூற்றுகளின்படி மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) *A* உண்மையாவதுடன் *B* பொய்யாகும்.
(2) *A* பொய்யாவதுடன் *B* உண்மையாகும்.
(3) *A, B* ஆகிய இரண்டும் உண்மையானவை.
(4) *A, B* ஆகிய இரண்டும் உண்மையாவதுடன், *A* பிரச்சினையாக இருக்கும். *B* தீர்வாக இருக்கும்.
(5) *A, B* ஆகிய இரண்டும் உண்மையாவதுடன் *B* ஆனது *A* இனை மேலும் அர்த்தமுடையதாக்கும்.

**47.** பின்வருவனவற்றிலிருந்து **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) சமூகப் போக்குகளின் அடிப்படையில் ஊடகப் படைப்பாக்கத்தை வழிப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல் ஊடகத் திறனாய்வு மூலம் நிகழ்கிறது.
(2) சமூகத்தின் அதிகார மையத்தைச் சவாலுக்குட்படுத்தும் வலுவை வெகுசன ஊடகம் கொண்டிருக்கின்றது.
(3) வெகுசன ஊடகங்களின் நிகழ்ச்சி நிரலினால் மக்களுக்கு சமூகத்தை யதார்த்தபூர்வமானதாக நோக்க முடிகின்றது.
(4) ஒருவர் தனது உயர் தகைமை, திறன்கள், தோற்றம் மற்றும் சமூக அங்கீகாரம் தொடர்பில் கொண்டிருக்கும் உளப்பாங்கு சுய எண்ணக்கரு என அழைக்கப்படுகின்றது.
(5) புதிய சிந்தனைகளால் பண்பாட்டில் ஏற்படும் மாற்றம் அல்லது விருத்தி பண்பாட்டு ஆர்முடுகல் என அழைக்கப்படுகின்றது.

**48.** மொழியின் பயன்பாடு தொடர்பிலான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தனியாள் செயற்பாடாக இருத்தல்
- பரஸ்பரத் தொடர்பாடலில் முக்கியமானதாக இருத்தல்
- நிலைநோக்கு ஒன்றுக்கும் கருத்து ஒன்றுக்கும் தேவையாயிருத்தல்
- எழுத்தறிவிற்குத் தேவையாயிருத்தல்

மேலுள்ள கூற்றுகளுக்கு அமைவாக மொழியின் வடிவங்கள் வரிசைக்கிரமமாக அமைவது

(1) பேச்சு, விவரணம், ஆற்றுகை, பிரதியாக்கம்
(2) பேச்சு, ஆற்றுகை, விவரணம், பிரதியாக்கம்
(3) பிரதியாக்கம், பேச்சு, விவரணம், ஆற்றுகை
(4) ஆற்றுகை, பேச்சு, பிரதியாக்கம், விவரணம்
(5) பிரதியாக்கம், பேச்சு, ஆற்றுகை, விவரணம்

**49.** கீழ்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.

*A* - நீர் பாய்ந்தோடும் ஒலியை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.
*B* - இசையினால் நான் தூண்டப்பெற்றிருந்தேன்.
*C* - கதையின் சாரத்தை நான் புரிந்துகொண்டேன்.
*D* - திரைப்படத்தின் இசை அந்தக் காட்சிக்குப் பொருத்தமில்லாது இருந்தது.

மேற்படி கூற்றுகளின் அடிப்படையில் செவிமடுத்தலின் வெவ்வேறு கட்டங்களைத் தொடரொழுங்கில் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) கேட்டல், எதிர்விளைவு, விளங்கிக்கொள்ளுதல், மதிப்பிடுதல்
(2) விளங்கிக்கொள்ளுதல், கேட்டல், எதிர்விளைவு, மதிப்பிடுதல்
(3) கேட்டல், மதிப்பிடுதல், விளங்கிக்கொள்ளுதல், எதிர்விளைவு
(4) கேட்டல், விளங்கிக்கொள்ளுதல், மதிப்பிடுதல், எதிர்விளைவு
(5) விளங்கிக்கொள்ளுதல், மதிப்பிடுதல், கேட்டல், எதிர்விளைவு

[பக். 8 ஐப் பார்க்க.

**50.** அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அவற்றின் பண்புகள் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. கூட்டுறவுச் சங்கம் - 1. மக்களின் பரஸ்பரப் பங்கேற்புடன் இயங்குதல்

B. பிரதேச அபிவிருத்திச் சபை - 2. கிராமத்தவர்களின் பங்குகளைச் சேகரித்துக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

C. கிராம அபிவிருத்திச் சங்கம் - 3. கிராமசேவகர் பிரிவினை இலக்காகக் கொண்டு இயங்குவது

D. கிராமதோய சபை இயக்கம் - 4. உள்ளூராட்சி சபை அதிகாரப் பகுதியினை இலக்காகக் கொண்டு இயங்குகிறது.

அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கும் அதன் பண்புக்கும் இடையிலான சரியான தொடர்பினை எடுத்துக்காட்டும் தெரிவு

(1) A1 , B3 , C2 , D4
(2) A2 , B4 , C1 , D3
(3) A4 , B3 , C2 , D1
(4) A3 , B4 , C2 , D1
(5) A2 , B1 , C4 , D3

## பகுதி C

**26.** மானுட உறவுகளைப் பராமரிக்கவும் விருத்தி செய்யவும் தொடர்பாடல் ஒரு பொறிமுறையாகும். இதனைப் பிரேரித்தவர்

(1) வோல்ற்றர் லிப்மென்
(2) சார்ள்ஸ் கூலி
(3) ஜோன் டுவி
(4) வில்பர் ஷ்ராம்
(5) குளோட் ஷனொன்

**27.** அச்சு, ஒலி மற்றும் காட்சி ஊடகங்களுக்கான பொதுவான பெறுநர்கள் என்பதற்கு மாற்றாக வேறுபாடுகள் கொண்ட பல்வகைமையுடனான பெறுநர்களைக் கொண்ட பிரிவுகள் தோற்றம் பெற்றமை அழைக்கப்படுவது,

(1) சிறுகூறுகளாக்குதல் என்பதாக ஆகும்.(2) பூகோளமயமாக்கம் என்பதாக ஆகும்.
(3) ஒழுங்குமுறை நீக்கம் என்பதாக ஆகும்.(4) ஊடகக் குவிகை என்பதாக ஆகும்.
(5) பெறுநர்மையம் என்பதாக ஆகும்.

**28.** ஊடகங்கள் மூலம் தகவலைத் தேடுதல், பெறுதல் மற்றும் வெளியிடுவதற்கான சுதந்திரம் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டிருப்பது.

(1) புலமைச் சொத்துச் சட்டத்தில் ஆகும்.
(2) தகவலறியும் சட்டத்தில் ஆகும்.
(3) பத்திரிகைப் பேரவைச் சட்டத்தில் ஆகும்.
(4) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் ஆகும்.
(5) இலங்கையின் அரசியலமைப்பில் ஆகும்.

**29.** முன்னைய இரவு பார்த்திருந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி பற்றிய சுருக்கமான மற்றும் தெளிவான குறிப்பினை வகுப்பில் முன்வைக்குமாறு ஆசிரியர் ரமணியைக் கேட்டிருந்தார். இங்கு ரமணி கொண்டிருக்க வேண்டிய திறன்,

(1) பகுப்பாய்வு
(2) மதிப்பீடு
(3) குழுவாக்கல்
(4) தொகுப்பாக்குதல்
(5) சாராம்சப்படுத்துதல்

**30.** ''எமது பிள்ளைகள், நாங்கள் அவர்களுக்குக் கூறுவதைச் செவிமடுப்பதுமில்லை செய்வதுமில்லை அவர்கள் வெறுமனே தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.'' பெற்றோரின் இத்தகைய புகார்களுக்கு ஆய்வு அடிப்படையிலான பதில் வழங்கியவர்

(1) குர்ட் லெவின்
(2) வில்பர் ஷ்ராம்
(3) ஜோர்ஜ் கெப்னர்
(4) போல் லாஸர்.ஃ.பெல்ட்
(5) வோல்ற்றர் லிப்மென்

**31.** கீழே தரப்படுவன நாட்டார் நாடகங்களை நிகழ்த்துவதற்கான குறிக்கோள்கள் சிலவாகும்.

*A* - கர்ப்பிணிப் பெண்ணுக்கான சடங்காக நிகழ்த்தப்பெறுவது.

*B* - ஆலோசனைச் செய்தியொன்று வழங்கப்பெறுவது.

*C* - செழுமையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் ஒன்று.

*D* - பண்பாடுகளுக்கிடையிலான தொடர்புகளைக் காட்டுவது.

*E* - பயிர்கள் அழிவது தொடர்பில் நிகழ்த்தப்பெறுவது.

இவற்றுள் 'கோலம் நாடகம்' பற்றி சரியானவையாக அமைவது

(1) *A, B*
(2) *A, C*
(3) *B, C*
(4) *B, D*
(5) *D, E*

[பக். 9 ஐப் பார்க்க.

**32.** வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் தான் தயாரித்த நாடகத்தில் சில வினாடிகளுக்கு மௌனத்தைப் பயன்படுத்தினார். இதன் மூலம் தெளிவாவது,
(1) ஊடக இரைச்சல் பற்றிய புரிதலை வழங்குதல் ஆகும்.
(2) வானொலிக்கு மௌனம் பொருத்தமானதல்ல என்பதைக் காட்டுவதற்கு ஆகும்
(3) நாடகத்திற்கு ஓர் தூண்டலை வழங்குவதற்கு ஆகும்.
(4) அனுபவக் களத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஆகும்.
(5) நாடகத்தின் சூழலமைவு அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஆகும்.

**33.** கீழே தரப்படுவன தொடர்பாடலின் சில பண்புகள் ஆகும்.
**A -** ஆழ்பரிவு **B -** பல்வகையான பெறுநர்கள் **C -** சுய எண்ணக்கரு **D -** வெளிச்சவீட்டு முறை

மேற்குறிப்பிட்ட பண்புகள் உரித்தான தொடர்பாடலின் வகைகள் முறையே
(1) ஆளுள், வெகுசன, ஆட்களிடை, குழுத் தொடர்பாடல்
(2) ஆளுள், ஆட்களிடை, குழு, வெகுசனத் தொடர்பாடல்
(3) ஆட்களிடை, வெகுசன, ஆளுள், குழுத் தொடர்பாடல்
(4) குழு, ஆட்களிடை, ஆளுள், வெகுசனத் தொடர்பாடல்
(5) வெகுசன, குழு, ஆளுள், ஆட்களிடைத் தொடர்பாடல்

**34.** அபிவிருத்தியில் சமூக உறவையும் சமத்துவத்தையும் உருவாக்குவதற்கு **ஒத்திசையாத** ஓர் பண்பாக அமைவது,
(1) அபிவிருத்திக்கு சம வாய்ப்புக்களைக் கொண்டிருத்தல்
(2) சமூக வகுப்பு வேறுபாடுகளை இல்லாதொழித்தல்
(3) நியாயமான காரணங்களுக்காக மாற்றங்களை மேற்கொள்ளல்
(4) ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்தல்
(5) விசேட மானுட உரிமைகளைக் கொண்டிருத்தல்

More Past Papers at
tamilguru.lk

**35.** மொழியின் பயன்பாடு பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
*A* - அது எழுத்தையும் படிமத்தையும் கொண்டிருக்கின்றது.
*B* - அது காட்சி வடிவங்கள், உருவகங்கள் மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றது.
*C* - அது நீண்ட சிக்கலான வாக்கியங்களை பயன்படுத்துவதில்லை.
*D* - அது குரல் முன்னிலைப்படுத்தும் மொழியைப் பயன்படுத்தி கொள்கின்றது.

மேற்படி கூற்றுகளுடன் பொருந்துவதான ஊடகங்கள் வரிசைக் கிரமமாக அமையும் ஒழுங்கு
(1) செய்திப்பத்திரிகை, திரைப்படம், வானொலி, அரங்கு
(2) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, அரங்கு, வானொலி
(3) தொலைக்காட்சி, அரங்கு, செய்திப்பத்திரிகை, வானொலி
(4) செய்திப்பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி
(5) திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, அரங்கு

**36.** கணக்கெடுப்பொன்றுக்குத் தரவுகளைத் திரட்டும்போது, முன்னைய தொடர்புடைய அறிக்கைகளிலிருந்து எண் தரவுகள் பயன்படுத்தப்படுமானால் அவை,
(1) எண்சார் தரவுகளாகும்.
(2) எண்சார் முதனிலைத் தரவுகளாகும்.
(3) எண்சார் இரண்டாம் நிலைத் தரவுகளாகும்.
(4) பண்புசார் தரவுகளாகும்.
(5) பண்புசார் இரண்டாம் நிலைத் தரவுகளாகும்.


**37.** கீழே தரப்படுவன ஊடகத் தணிக்கையுடன் / ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய சில அம்சங்களாகும்.
*A* - ஊடகப் பிரதிநிதிகள் இணைந்திருப்பர்.
*B* - ஊடகப் பணியாளர்கள் தீர்மானங்களையும் பரிந்துரைகளையும் அவசியம் பின்பற்றுவர்.
*C* - அரசாங்கத்தின் பங்கேற்பை அது கொண்டிருக்கும்.

மேற்கூறிய கூற்றுகளுடன் தொடர்புபட்ட தணிக்கை / ஒழுங்கமைப்பு அணுகுமுறைகள்
(1) சுய தணிக்கை
(2) நிறுவனத்திற்குள்ளான தணிக்கை
(3) சட்டரீதியான தணிக்கை
(4) கூட்டுத் தணிக்கை
(5) அரச தணிக்கை

[பக். 10 ஐப் பார்க்க.

**38.** இணையத்தின் ஊடாக டிஜிட்டல் நூலகத்திற்குள் நுழைந்து உங்களுக்குத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். புதிய ஊடகத்தின் எப்பண்பு நேரடியாக இதனைப் பாதிக்கின்றது?
(1) தரவுத்தளம் (Data base).
(2) இடைத்தொடர்பு (Interactivity).
(3) தானியங்கி (Automation).
(4) வலையமைப்பு (Networking).
(5) அதிவேகச் செய்தியனுப்புகை (Fastest Messaging).

- கீழே தரப்பட்ட வரைபடத்தை **39** முதல் **42** வரையான வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்துக.




**39.** தொடர்பாடல் மாதிரியொன்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது. A, B மற்றும் C ஆகியவற்றைக் குறித்து நிற்கும் விடயங்கள் முறையே
(1) குறிமுறையாக்குபவர், குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம்
(2) தொடர்பாடுநர், செய்தி, ஊடகவழி (channel)
(3) குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம், தொடர்பாடுநர்
(4) குறிமுறையாக்குபவர், பெறுநர், செய்தி
(5) குறிமுறையாக்குபவர், செய்தி, குறிமுறையவிழ்ப்பவர்

**40.** மேற்படி வரைபடத்தின்படி, A, B மற்றும் C ஆகியவற்றுக்கு இடையிலான செயன்முறையின் பிரகாரம்
*J* - நேர்வழித் தொடர்பாடல் இடம்பெறுவது காணக்கிடைக்கின்றது.
*K* - பின்னூட்டம் பெறப்படுவது தெளிவாகின்றது.
*L* - ஏதாவது இடையூறு அங்கிருப்பது தொடர்பில் உணரப்படக் கூடியதாகின்றது.
*M* - எவ்வாறு செய்தி புரிந்து கொள்ளப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.
இவற்றில் உண்மையான கூற்றுகள்
(1) *J, K* ஆகியன மாத்திரம் (2) *K, L* ஆகியன மாத்திரம்
(3) *L, M* ஆகியன மாத்திரம் (4) *J, K, L* ஆகியன மாத்திரம்
(5) *K, L, M* ஆகியன மாத்திரம்

**41.** வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மிக நெருக்கமாகத் தொடர்பிலுள்ள தொடர்பாடல் மாதிரி எது?
(1) அரிஸ்டோட்டில் மற்றும் ஹரோல்ட் லாஸ்வெல்
(2) சார்ள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
(3) டேவிட் பெர்லோ மற்றும் வில்பர் ஷராம்
(4) குளோட் ஷெனொன் மற்றும் வோரன் வீவர்
(5) வோரன் வீவர் மற்றும் சார்ள்ஸ் ஒஸ்கூட்

**42.** மேற்படி வரைபடத்தினை HUB மாதிரியுடன் ஒப்பிடும்போது கீழ்த்தரப்பட்டவற்றுள் மிக நெருக்கமான விடயம் யாது?
(1) தாக்கம் (2) வடிகட்டிகள் (3) குறிமுறைகள்
(4) ஒழுங்காக்கிகள் (5) வாயிற்காப்பாளர்கள்

**43.** கீழே தரப்படுவன பொதுமக்கள் தொடர்பு பற்றியதும் அதனோடு இணைந்த செயற்பாடுகள் தொடர்பானதுமான கூற்றுகள் சிலவாகும்.
*A i*. ஊடக பொதுமக்கள் தொடர்பு *B i*. தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு
*ii*. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் *ii*. ஆய்வு மற்றும் அறிவு
*C i*. நிறுவன பொதுமக்கள் தொடர்பு *D i*. அரச பொதுமக்கள் தொடர்பு
*ii*. அரச உறவுகள் *ii*. ஒழுக்கக் கோவை
மேற்படி கூற்றுகளில் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் காட்டும் தெரிவு
(1) *A, B* (2) *A, B, C*
(3) *B, C* (4) *B, C, D*
(5) *A, B, C, D* ஆகிய அனைத்தும்

[பக். 11 ஐப் பார்க்க.

**44.** கணக்கெடுப்புச் செயன்முறையொன்றின் பின்னர், அதில் பங்கேற்ற உறுப்பினர்கள் தமது அனுபவத்தை பின்வருமாறு விபரித்தனர்.

ராதா - தலைப்புக்குப் பொருத்தமாக எழுதப்பட்டிருந்த தகவல்களை வாசித்ததன் பின்னர் இலகுவாக அமைந்தது.

வீரன் - வகுப்பிலிலுள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் தரவுகள் திரட்டப்பட்டதால் மாதிரிகளை தெரிவுசெய்தல் இலகுவாயிருந்தது.

நந்தினி - தரவுகளைப் பெற்றுக்கொடுத்தவர்களை பாராட்டும் விதமாக, அவர்களது பெயர்கள் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளன.

சாந்தி - நேர்காணப்படுபவர்கள் பற்றிய தகவல்களை நாம் முதலே அறிந்திருந்ததால் நேர்காணலை மேற்கொள்வது இலகுவாக இருந்தது.

இவற்றில் சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்,

(1) ராதா. வீரன்
(2) ராதா, சாந்தி
(3) ராதா, நந்தினி
(4) வீரன், நந்தினி
(5) நந்தினி, சாந்தி

**45.** பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவுக்கு விடையளிக்குக.

| | X | Y |
|---|---|---|
| *A* | சுயநிர்ணயம் | தனிப்பட்ட சுதந்திரம் |
| *B* | ஊடக நுகர்வு | பெறுநர் தரவரிசை |
| *C* | தேவை நிமித்தம் | சுகாதார சேவைகள் |
| *D* | சிறுகூறுகளாக்குதல் | பரந்த பெறுநர்கள் |

மேற்படி அட்டவணையில் X நிறுவப்படும்பேது Y யின் அதிகரிப்பானது பாதிக்கப்படுவது

(1) *A, B* யில்
(2) *A, C* யில்
(3) *B, C* யில்
(4) *B, D* யில்
(5) *C, D* யில்

**46.** கணக்கெடுப்பு ஆய்வு பற்றிய இரண்டு கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

A - தேசிய தொலைக்காட்சியின் தொடக்கம் மற்றும் அந்நேரத்தில் அதன் தாக்கம் தொடர்பில் கணக்கெடுப்பு ஆய்வின் வழியாக அறியமுடியாது.

B - கணக்கெடுப்பின் மூலம் கடந்ததொரு சந்தர்ப்பம் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்க முடியாது.

மேற்படி கூற்றுகளில்,

(1) A உண்மையாவதுடன், B பொய்யானதாகும்.
(2) A பொய்யாவதுடன், B உண்மையானதாகும்.
(3) A, B ஆகிய இரண்டும் உண்மையானவையாகும்.
(4) A, B ஆகிய இரண்டும் உண்மையாவதுடன், A இற்கு B காரணம் ஒன்றைத் தரும்.
(5) A, B ஆகிய இரண்டும் உண்மையாவதுடன், B இற்கு A காரணம் ஒன்றைத் தரும்.

**47.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.

*A*. மக்பிறைட் அறிக்கை - ஒரு நாட்டில், சமத்துவமின்மைகளை வேரறுப்பதாக ஊடகம் பற்றிய கொள்கைகள் அவசியம் தயாரிக்கப்படவேண்டும்.

*B*. சமஷ்டி தொடர்பாடல் ஆணைக்குழு - காலனித்துவ நாடுகளில் வானொலி ஊடகத்தைக் கையாள்வதற்கான கொள்கைகளை அறிமுகப்படுத்தியது.

*C*. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் - தனக்கென அபிப்பிராயத்தை வைத்திருக்கும் சுதந்திரம் மற்றும் வெளியிடும் உரிமை ஒருவருக்கு உண்டு.

மேலுள்ள கூற்றுகளுள் நேரடித் தொடர்பைக் காட்டும் சோடி / சோடிகள் காணப்படும் தெரிவு

(1) *A* மாத்திரம்
(2) *A, B* ஆகியன மாத்திரம்
(3) *A, C* ஆகியன மாத்திரம்
(4) *C* மாத்திரம்
(5) *B, C* ஆகியன மாத்திரம்

[பக். 12 ஐப் பார்க்க.

**48.** பின்வரும் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

*A* *i*. எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய எளிய கட்டமைப்பைக் கொண்டது.
*ii*. பாரம்பரியத் தொடர்பாடல்

*B* *i*. எளிமை, ஆழமற்றத் தன்மை மற்றும் பேரளவுத் தயாரிப்பினைக் கொண்டது.
*ii*. வெகுசனத் தொடர்பாடல்

*C* *i*. அறிவு யுகத்தின் ஓர் பண்பாட்டுத் துணைப் பிரிவு
*ii*. பிரசித்த பண்பாடு

*D* *i*. தேசிய மற்றும் இனப் பண்பாடுகளைக் கடந்து வியாபித்திருப்பது
*ii*. பூகோளப் பண்பாடு

இவற்றுள் நெருக்கமான தொடர்பினைக் காட்டும் சோடி

(1) *A, B* (2) *A, D* (3) *B, C*
(4) *B, D* (5) *C, D*

**49.** முரண்பாடொன்றுக்கான தீர்வொன்றில் நீங்கள் தலையிடவேண்டி இருந்ததாகக் கற்பனை செய்துகொள்க. முரண்பாட்டின் தன்மையை புரிந்துகொண்டதன் பின்னர், நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய மிகப் பொருத்தமான அடுத்த படிமுறை

(1) எதிர்த்தரப்புக்களுடன் தொடர்பாடுதல்
(2) மிகப் பொருத்தமான தீர்வினைத் தெரிவுசெய்தல்
(3) மூன்றாம் தரப்பொன்றின் ஈடுபாட்டைப் பெறுதல்
(4) முன்மொழிவுகளை முன்வைத்தல்
(5) முரண்பாட்டுக்கான மாற்றுக்களை அடையாளங்காணுதல்

**50.** வெவ்வேறு நிறுவனங்களைப் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A: இலங்கை பத்திரிகைப் பேரவை | 1: ஜனாதிபதி தலைவரையும் பணிப்பாளர் சபையையும் நியமிப்பார். |
| B: இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு | 2: விடயத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் உறுப்பினர்களை நியமிப்பார். |
| C: பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை | 3: வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த புத்திஜீவிகளைக் கொண்டதாக இச்சபை அமையும். |
| D: இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு | 4: அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தமது உத்தியோகபூர்வ அதிகாரத்தின்கீழ் பணிப்பாளர் சபையின் உறுப்பினராவார். |

இவற்றுள், நிறுவனத்திற்கும் பதவி நிலைகளுக்குமான சரியான தொடர்பைக் காட்டும் தெரிவு

(1) A1 , B3 , C2 , D4 (2) A4 , B2 , C3 , D1
(3) A3 , B2 , C4 , D1 (4) A1 , B2 , C3 , D4
(5) A4 , B3 , C2 , D1

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* இந்த வினாத்தாள் **பகுதி A, பகுதி B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
* **பகுதி A மூன்று** வினாக்களையும், **பகுதி B** எட்டு வினாக்களையும் கொண்டது.
* **பகுதி A பழைய, புதிய பாடத்திட்டங்கள்** என இரண்டு பகுதிகளுக்கும் பொதுவானது.
* **பகுதி B** இல் **4, 5, 6, 7** ஆம் வினாக்கள் **பழைய பாடத்திட்டத்திற்கும் 8, 9, 10, 11** ஆம் வினாக்கள் **புதிய பாடத்திட்டத்திற்கும்** அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.
* **பகுதி A** இலிருந்து ஏதாவது **இரண்டு** வினாக்களுக்கும், **பகுதி B** இலிருந்து ஏதாவது **மூன்று** வினாக்களுக்குமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடையளிக்குக.

## பகுதி A

**1.** தொடர்பாடலைப் புரிந்துகொள்ளவும், வெற்றிகரமாக அதனை நடைமுறைப்படுத்தவும் அதன் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக எவரொருவரும் அவசியம் புரிந்துகொள்ள வேண்டும்.

(i) மத நிகழ்வொன்றில் பின்பற்றப்படும் வாய்மொழி சாராத தொடர்பாடல் முறைகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஊடக வட்டத்தில் குழுத்தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) முறைசார் தொடர்பாடலுக்கும் முறைசாராத் தொடர்பாடலுக்கும் இடையிலான **மூன்று** வேறுபாடுகளை விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைக் கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

**2.** வெகுசன ஊடகங்களின் படைப்பாக்க உள்ளடக்கம் பெறுநர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றது.

(i) தொலைக்காட்சி ஊடகத்தில் மொழியைப் பயன்படுத்தும்போது அவசியம் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய **நான்கு** அம்சங்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஏதேனும் நிறுவனத்தில் அல்லது அமைப்பில் உள்ள பொதுமக்கள் தொடர்புச் செயன்முறையுடன் தொடர்புபடும் பங்குதாரர்களின் **நான்கு** வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டினை** விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) படைப்பாக்கத் தொடர்பாடலில் நாட்டாரியலைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை **மூன்று** அம்சங்களினூடாக உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) வானொலி ஊடகத்தின் படைப்பாக்க நிகழ்ச்சி வகைகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**3.** சமூகக் கருத்தியலில் தொடர்பாடல் ஊடகம் ஒரு வலுவான கருவியாகும்.

(i) ஷெனொன் மற்றும் வீவர் தொடர்பாடல் மாதிரியின் விசேட இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) வெகுசன ஊடகங்களில் காணக்கிடைக்கின்ற பிரசித்த பண்பாட்டின் பண்புகள் **இரண்டினை** விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) நிறுவனமொன்று வெளியகப் பொதுமக்கள் தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு பயன்படுத்தக்கூடிய கருவிகள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) சமூக ஊடகங்கள் மானுட நலனுக்கு ஆதாயம் தரக்கூடியதாகவும் தீங்கிழைப்பதாகவும் தாக்கங்களை ஏற்படுத்தும் விதம் தொடர்பாக தலா **இரண்டு** அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு 200 சொற்களுக்குக் குறையாத செய்திக் கட்டுரையொன்று எழுதுக. (16 புள்ளிகள்)

## பகுதி B

**4.** சமூகத்தில் காணப்படுகின்ற வெவ்வேறு பிரச்சினைகள் பற்றி வெகுசன ஊடகங்களால் வழங்கப்படுகின்ற விளக்கங்கள் பெறுநர்களுக்கு முக்கியமானவை.

(i) மாற்று அல்லது எதிர்ப்பு ஊடகத்தின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மேம்படுத்தற் கலவையின் (promotion - mix) **நான்கு** அம்சங்களை எடுத்துரைத்து, அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஒரு குடும்பத்தின் உள்ளக அமைதியும் சகவாழ்வும் வீழ்ச்சியடைவதை வெளிப்படுத்தும் **மூன்று** வழிகளை விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) மாணவர்கள் தமது கற்றல் செயன்முறையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஊடகக்கல்வி வழங்கப்படுவது எவ்வகையில் முக்கியமாகின்றது என்பதனை **நான்கு** அம்சங்களினூடாக விளக்குக. (16 புள்ளிகள்)

**5.** ஊடகங்கள் செயற்படும் விதம் தொடர்பாக புரிந்துகொள்வதற்கு பிரஜைகள் விமர்சனரீதியாக தம்மை வளர்த்துக்கொள்வது தேவையானதாகும்.

(i) பிரஜைகள் ஊடகவியலின் சிறப்பியல்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடகப் பண்பாட்டின் பண்புகள் **இரண்டினைப்** பெயரிட்டு, தொலைக்காட்சி விளம்பரங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் அவை எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன என்பதை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) "வெகுசன ஊடக உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு ஊடக விளங்கறிவு அவசியமானது." இக்கூற்றினை **மூன்று** அம்சங்களினூடாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) திறனாய்வில் அழகியல் சார்ந்த பிரவேசம் மற்றும் நல்லொழுக்கம் சார்ந்த பிரவேசம் ஆகியவற்றை தலா **இரண்டு** அம்சங்களைப் பயன்படுத்தி உதாரணங்களுடன் ஆராய்க. (16 புள்ளிகள்)

**6.** (i) சமூகமயமாதல் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக் கதையை அடிப்படையாகக் கொண்ட சிறுவர் நாடகமொன்றை உருவாக்கும்போது அவசியம் கவனத்திற் கொள்ளவேண்டிய **இரண்டு** அம்சங்களை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) கிராம அபிவிருத்திப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குழுத்தொடர்பாடல் திறன் என்ற வகையில் நேர்காணல்கள் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) அச்சு ஊடகத்தில் மொழியைப் பயன்படுத்தும்போது அவசியம் கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

**7.** பூகோளச் சமூகமொன்றில் அபிவிருத்திச் செயற்பாடுகளை அமுலாக்கும்போது, பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

(i) பூகோளமயமாதல் எண்ணக்கரு கொண்டிருக்கும் அம்சங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) துணைப் பண்பாடுகள் இரண்டினைப் பெயரிட்டு, அவற்றுள் ஒன்றில் காணப்படும் பண்பாட்டுச் சிறப்புக்களை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டிலுள்ள பண்பாட்டின் விருத்திக்கு பண்பாட்டுப் பரிமாற்றம் உதவுமாற்றை **மூன்று** அம்சங்களைப் பயன்படுத்தி விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற வகையில் கிராமத்தின் தண்ணீர் செயற்றிட்டமொன்றிற்கான இறுதி அறிக்கையை நீங்கள் தயாரிக்கவேண்டியுள்ளது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** விடயங்களை விபரிக்குக. (16 புள்ளிகள்)

**8.** ஊடகக் கற்கைகளில், உலகின் தற்காலப் போக்குகள் குறித்த அறிவு அவசியமானது.

(i) விமர்சன ரீதியான பெறுநரொருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய **நான்கு** திறன்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 19 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) உலகில் ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலில் பயன்படும் அடிப்படை அணுகுமுறைகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) புலமைச் சொத்துச் சட்டம் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டம் ஆகியவற்றைப் பின்வரும் அம்சங்களின் பேரில் விபரிக்குக.

(a) அறிமுகம்

(b) பணிகள் (16 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

**9.** "மக்களின் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் வெகுசன ஊடகங்களை விடவும் புதிய ஊடகங்களும் சமூக ஊடகங்களும் வலுவாக உள்ளன. / வலுவாக இல்லை." என்னும் கருப்பொருளில் நடைபெறவிருக்கும் விவாதமொன்றுக்கு நீங்கள் தகவல்களைத் திரட்ட வேண்டியுள்ளது.

(i) யுனெஸ்கோவினால் வெளியிடப்பட்ட 'பல குரல்கள் ஒரு உலகம்' ('Many Voices One World') அறிக்கையில் குறிப்பிட்டதன்படி, வெகுசன ஊடகங்களின் விசேட பணிகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) செய்திகளை உருவாக்கவும் விநியோகிக்கவும் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகப் பிரயோகங்கள் (Apps) **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினது** செயற்பாடுகள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) புதிய ஊடகங்களில் காணப்படக்கூடிய இயல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஊடகக் குவிவினால் (media convergence) வெகுசன ஊடகங்களும் அவற்றின் பெறுநர் தன்மைகளும் மாற்றமடைந்திருக்கும் முறையினை **நான்கு** அம்சங்களைப் பயன்படுத்தி ஆராய்க. (16 புள்ளிகள்)

**10.** 'பொதுமக்களின் ஊடக விளங்கறிவை அளவிட ஆய்வு பயன்படுத்தப்படக் கூடுமாகின்றது.'

(i) ஆய்வின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஆய்வுகளை மேற்கொள்வதன் அனுகூலங்கள் **நான்கினை** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகத் திறனாய்வில் பயன்படுத்தப்படக்கூடிய கருத்தியல்கள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) பெறுநரொருவர் ஊடக விளங்கறிவைக் கொண்டிருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை, **நான்கு** அம்சங்களைப் பயன்படுத்தி ஆராய்க. (16 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

**11.** இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை வெற்றிகரமானதொன்றாக நடாத்த பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள், ஊடக அதிகாரிகள் மற்றும் நிகழ்வு முகாமையாளர்கள் ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானது என அதிபர் வலியுறுத்தியிருந்தார்.

(i) நிறுவனம் என்ற வகையில் பாடசாலையொன்றுக்கு பொதுமக்கள் தொடர்பு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, அவசியம் பயன்படுத்தவேண்டிய திறன்கள் **இரண்டினை** விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) விளையாட்டுப் போட்டியைப் பிரபல்யப்படுத்துவதில் ஊடக அதிகாரியொருவரால் அவசியம் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) விளையாட்டுப் போட்டியில் நிகழ்வு முகாமைத்துவத்திற்கான திட்டத்தில், பின்வரும் அம்சங்களை விளக்குக.

(a) நிகழ்விடம்

(b) நிகழ்ச்சி நிரல்

(c) அழைக்கப்படுபவர்களைத் தீர்மானித்தல்

(d) இடர் மதிப்பீடு (risk assessment) (16 புள்ளிகள்)

* * *